**பெல்மதுள்ள பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 20 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 19 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பெல்மதுள்ள பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய கடன்கொடுத்தோருக்காக ரூபா 28,700 தொகை குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் பெறுமதி அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் முற்பணமாகப் பெற்ற வருமானம் ரூபா 120,700 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வியாபார அனுமதிப்பத்திர வருமானத்தின் சிட்டையிடல்களின் மொத்த வருமானம் ரூபா 241,610 ஆக இருந்த போதிலும், அது ரூபா 281,530 ஆகப் பதியப்பட்டமையின் காரணமாக ஆண்டின் வருமானம் ரூபா 39,920 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2015 ஆம் ஆண்டின் போது மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 297,873 தொகை மீளாய்வாண்டின் செலவினத்தில் ஈடு செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது எதிர்வரும் வருடங்களுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 265,200 தொகை மீளாய்வாண்டின் செலவினத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 32,673 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டதுடன் எதிர்வரும் வருடங்களுக்காக செலுத்தப்பட்ட செலவினம் முற்கொடுப்பனவுகள் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 04 கணக்கு விடயங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் பட்டோலைகளின் படியான மீதிக்கும் இடையே ரூபா 4,029,926 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 10 கணக்கு விடயங்களுக்குரிய செலவினப் பேரேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களுக்கும் இடையே ரூபா 312,792 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர் கடன் பதிவேட்டின் படி ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 21 உத்தியோகத்தர்களிடமிருந்து 1996 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 162,850 தொகையான ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரம் 2015 ஆம் ஆண்டில் கெட்டேதென்ன கழிவுப்பொருள் அகற்றப்படும் இடத்தில் தடம் புரண்டமையினால் ஏற்பட்ட இழப்பு தொடர்பாக காப்புறுதிக் கம்பனி இணங்கிய தொகையிலிருந்து ரூபா 79,175 தொகை 2017 சனவரி 27 ஆந் திகதி வரையிலும் கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்டது.

(இ) கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் 2016 ஒக்தோபர் 06 ஆந் திகதி வரையிலும் கூட்டுமொத்தமாக ரூபா 20,048,165 கடன்கொடுத்தோர் மீதியொன்று காணப்பட்டதுடன் அந்த கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல வருடகாலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 480,930 கூட்டுப்பெறுமதியான 02 கணக்கு மீதிகளின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குரிய விரிவான பட்டோலை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 132,088 தொகையான ஊழியர் கடன் கணக்கின் வேறுபாடு மீளாய்வாண்டின் போது திரட்டு நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்த போதிலும் வேறுபாட்டிற்கான காரணம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

---

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | |
| (i) 24 ஆவது பிரிவின் 1(அ) மற்றும் (ஆ) உப பிரிவுகள் | சபையின் மூலம் எல்லை குறிக்கப்பட்ட வீதிகள் மற்றும் ஒழுங்கை வீதிகள் தொடர்பான பெயர்ப் பதிவேடொன்றை பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 1962 ஆம் ஆண்டின் ஏப்ரல் 05 ஆந் திகதியின் பின்னர் சபைக்குரிய வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கோ சபைக்குரிய வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கோ அல்லது அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கோ முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 126(ix)(ஆ) பிரிவு | கழிவுகளை அகற்றுதல் தொடர்பாக உப விதியொன்றை விதித்து அமுல்படுத்தவதற்கும் கழிவுப்பொருள் செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 - 2016 இன் உப இலக்கம் 01 இன் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணியாகக் காண்பிக்கப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு 2016 ஆம் ஆண்டு வரையிலும் சபை தவறியிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 571(2)(3) | காலாவதியான ரூபா 1,197,883 தொகையான வைப்புக்களை ஓய்வுபெறச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) நிதிப்பிரமாணம் 760

2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றில் 03 விடயங்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்கங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் ''இ'' பகுதியில் குறித்த செயற்திட்டம் தொடர்பாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரங்களைக் கையளித்தல் மற்றும் அதிகாரங்களை அமுல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கோவையின் 3.3.1 மற்றும் 4.2 ஆம் உப பந்திகள்

சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக்காலமாக 03 வருடங்கள் முடிவடையும் போது மீண்டும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், சபையினால் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட புதிய அனுமதிப்பத்திரம் மற்றும் 07 புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக மீண்டும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் சபை அதிகாரப் பிரதேசத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கைத்தொழில் தொடர்பான மெய்மையாய்வை மேற்கொண்டு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 பெப்ரவரி 24 ஆந் திகதிய ஓய்வூதியத் திணைக்களத்தின் 02/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை

-------------------------------------------------------------------

4.1 ஆம் பிரிவு

சகல உள்ளூராட்சி நிறுவனங்களினாலும் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட பதவியணியினர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பங்களிப்புச் செய்ய வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருக்கும் போது அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்ட 21 ஊழியர்களுக்காக ஊழியர்

சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,357,735 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,395,358 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 962,377 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

------------------------------------------------------------

நிதி விளைவுகள் ரூபா 962,377 இனால் அதிகரித்தமை தொடர்பில் 02 விடயங்களின் வருமானம் ரூபா 1,323,258 இனால் அதிகரித்தமையும், 03 விடயங்களின் செலவினம் ரூபா 279,004 இனால் குறைவடைந்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

-----------------------------------------

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

--------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீதவரியும் வரியும் | 5,828 | 7,375 | 9,269 |
| வாடகை | 2,876 | 1,860 | 1,619 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 386 | 643 | 14 |
| ஏனைய வருமானம் | 69,799 | 40,185 | 20,230 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது ஆதனவரி, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் சேவைகளுக்கான கட்டணம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவினைவிட முறையே 23 சதவீதம், 63 சதவீதம் மற்றும் 64 சதவீதம் என்ற சதவீதங்களால் அதிகரித்திருந்ததுடன் வாடகை வருமானம், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய வருமானங்கள் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட அளவினை விட முறையே 03 சதவீதம், 25 சதவீதம், 61 சதவீதம் மற்றும் 54 சதவீதம் என்ற சதவீதங்களால் குறைவடைந்திருந்தன.

### 2.3.3 ஆதனவரி

2016 யூன் 30 ஆந் திகதியளவில் 3,455 ஆதனவரி அலகுகளிலிருந்து ரூபா 4,428,288 நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 114 அலகுகளுக்குரிய ரூபா 967,937 நிலுவை மீதியும் காணப்பட்டது. அது மொத்த நிலுவையில் 21 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3.4 வாடகை

சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட 04 கடைகளிலிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 297,368 தொகையான நிலுவை வாடகை 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

### 2.3.5 ஏனைய வருமானம்

----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 126 ஏக்கர் வரி அலகுகளிலிருந்து ரூபா 64,759 தொகையான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையிலும் நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பான மெய்மையாய்வு மேற்கொண்டு பதிவேடொன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமல் சபைக்கு வருகை தந்து கொடுப்பனவு செய்கின்ற வியாபார மற்றும் கைத்தொழில் வரிகள் மாத்திரம் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 186 நிலையங்களிலிருந்து 2016 ஆம் ஆண்டிற்கான வியாபார வரி, கைத்தொழில் வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பன 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 ஒக்தோபர் 16 ஆந் திகதிய பொதுச் சபைக் கூட்டத்தின் தீர்மான இலக்கம் 13 இன் படி நாளாந்த கழிவுப் பொருள் உருவாகுவதன் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டு முதல் திருத்தப்பட்ட கழிவுப்பொருள் வரிக் கட்டணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையிலும் பழைய கட்டணம் அறவிடப்பட்டமையினால் சபைக்கு ரூபா 60,500 தொகையான கழிவுப்பொருள் வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டம் மற்றும் கட்டிட கட்டளைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் V ஆவது பட்டோலையின் பிரகாரம் தொலைபேசி கோபுரங்களை நிர்மாணிக்கும் பொது அறவிடவேண்டிய கட்டணங்களுக்கு முரணானதாக சபை அதிகாரப் பிரதேுசத்தில் தாபிக்கப்பட்ட 15 தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்து ரூபா 2,658,850 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 03 நிர்மாணங்களில் கட்டிட விண்ணப்பப்படிவக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் குறித்த கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

இரத்தினபுரி காணிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2015 சனவரி முதல் 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம் பிரதேச சபை நிதியத்தின் கீழ் அமுல்படுத்துவதற்காக ரூபா 2,261,083 கூட்டுப்பெறுமதியுடைய 14 வேலைகள் முன்மொழியப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் எந்தவொரு வேலையும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய நிதியுதவியின் கீழ் ரூபா 29,857,996 கூட்டுப்பெறுமதியுடைய 61 வேலைகள் பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 444,653 கூட்டுத்தொகையான செலவில் 03 வேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(இ) பாதீட்டில் உள்ளடக்கப்படாத 25 வேலைகள் ரூபா 11,259,681 தொகை செலவில் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதிஏற்பாடுகளின் கீழ் 02 வேலைகள் ரூபா 1,289,277 செலவில் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதி 520/7 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் IV(ஆ) ஆவது பகுதியின் 39 ஆம் அத்தியாயத்தின் 01 ஆம் உப விதியின் பிரகாரம் பிரதேச சபையினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றி அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட முடியாதிருந்த போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில்

காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பதாதை தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு சபையின் வருமானத்தை உயர்வடையச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி ரூபா 74,465 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும் அவைகளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 ஆகஸ்ட் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி மாறப்பன உப அலுவலகம் மற்றும் பிரதான அலுவலகத்தின் மூலம் வங்கியிலிடப்படாத முறையே ரூபா 8,915 மற்றும் ரூபா 517,447 தொகையான பணம் மற்றும் காசோலைகள் என்பவற்றுடன் 2003 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாத மீதியாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 259,296 என்பவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரப் பிரதேசத்தில் 44 மயான நிலங்கள் காணப்பட்ட போதிலும் அதில் 06 மயான நிலங்கள் மாத்திரம் சபைக்கு கையேற்கப்பட்டிருந்ததுடன், காணி மீளமைப்புக் குழுவிற்குரிய காணிகளில் அமைக்கப்பட்டுள்ள 21 மயான நிலங்கள் தொடர்பாக உரிய கையேற்பு நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) 2015 யூலை 27 ஆந் திகதி பிரதேச சபையின் உத்தியோகத்தர்களினால் கெட்டேதென்ன பிரதேசத்தில் அனுமதியற்ற நிர்மாணங்கள் 14 இடங்களில் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாணங்களை உடனடியாக சட்டரீதியாக்குவதற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினர்களிடம் 2015 ஆகஸ்ட் மாதம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2017 யூன் வரையிலும் கடிதம் அனுப்பப்பட்டு ஒரு வருட காலத்தை விஞ்சியிருந்த போதிலும், அந்த நிர்மாணங்களை சட்டபூர்வமாக்காமை தொடர்பாக சபையினால் எதிர்கால நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது மீள் நினைவூட்டலை அனுப்புவதற்கோ நடவடிக்கை

எடுக்கப்படவில்லை. அதற்கு மேலதிகமாக முறைப்பாடுகளின் மூலம் இனங்காணப்பட்டிருந்த 18 அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாகவும் உரிய தரப்பினருக்கு வாய்மொழியாகவும் எழுத்து மூலமும் அறிவுரை வழங்கியிருந்த போதிலும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

சபைக்குரிய கெப் வண்டியொன்று நீண்டகாலமாக சபை வளவில் விளைவற்று தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத்தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சப்ரகமுவ மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 489,931 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட மார்சல் வெலிவத்த வீதியின் உப வீதிக்கு கொங்கிரீட் இடும் வேலை 2016 சனவரி 10 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) அளவிடை அறிக்கையின் படி வீதியின் நீளம் 61.85 மீற்றராக இருக்க வேண்டிய போதிலும், பௌதீக பரிசோதனையின் பிரகாரம் அது 61 மீற்றராக இருந்தமையினால் நிறைவேற்றப்படாத 0.85 மீற்றருக்காக ரூபா 4,499 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) வீதியின் ஆரம்பம் முதல் அளத்தல் நடவடிக்கைகளைச் செய்யும் போது முதல் 21 மீற்றரை உள்ளடக்கிய ஒட்டுமொத்த அகலத்திலும் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்ததுடன், வீதியின் சிற்சில இடங்களில் மேற்பரப்பில் கற்கள் வெளிப்பட்டிருந்தது.

(iii) மேற்கூறப்பட்ட வீதி ஒரு வீட்டிற்கு மாத்திரம் நுழையக்கூடிய வீதியாக இருந்தது.

(ஆ) 2014 தொறின் தொறட்ட - கமின் கமட்ட தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாண சபை ஊடாக ரூபா 1,650,000 மதிப்பீட்டுப் பெறுமதியில் ஆரம்பிக்கப்பட்ட நாறங்கொட நிதன்கல போதி விகாரைக்கு அருகில் சிறிய பாலமொன்றை நிர்மாணிக்கும் வேலை நிதிஏற்பாடு இல்லாமையின் அடிப்படையில் நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2015 யூன் 23 ஆந் திகதி வரையில் 03 கொங்கிரீட் தூண்களும், பக்கச் சுவரும் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த வேலைக்காக ரூபா 200,000 முற்பணம் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் இது வரையில் கைவிடப்பட்ட செயற்திட்டத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இந்த பாலத்தின் நுழைவு வீதி போதியளவான அகலத்துடன் காணப்படாமை தொடர்பாக முன்னைய கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் விகாரையின் மதகுரு மற்றும் கிராமவாசிகளின் கூற்றின் படி முன்னொருபோதும் இல்லாத வகையில் அதிக மழை காலங்களில் ஆற்றியிருந்து வழிந்தோடிவருகின்ற அதிக நீரின் இயலளவு வழிந்தோடிச் செல்வதற்கு இந்த நிர்மாணம் இடையூறாக இருந்ததுடன், ஆற்றிலிருந்து வழிந்தோடும் நீரினால் இருபக்கமும் உள்ள கட்டிடங்கள் மற்றும் நிலப்பகுதிகள் தாழ்கின்றமையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 3.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் 2006 ஆம் ஆண்டின் போது வெளியிடப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவ வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கழிவுப் பொருட்களை நிலத்தில் அகற்றும் போது கழிவுப் பொருட்களின் மேல் மண் அல்லது வேறு ஏதாவது பொருட்களையிட்டு நாளாந்தம் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், சபையினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்காதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 19 செலவின விடயங்களுக்குரிய ரூபா 3,696,100 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாடும் செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் 07 செலவின விடயங்களுக்குரிய ரூபா 3,575,000 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாட்டில் 84 சதவீதம் முதல் 99.8 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது.

### 4.2 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணிப்பீடு செய்யக்கூடிய ரூபா 5,001,434 பெறுமதியான 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் சபை தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) வகைப்படுத்தல் வழு |
| | (ii) ஒதுக்கம் மேற்கொள்ளப்படாமை |
| | (iii) அதிகரித்துப் பதிதல் |
| | (iv) பேரேட்டுக் கணக்குகளும் பட்டோலைகளும் இணங்காமை |

| | | |
|---|---|---|
| (ஆ) | வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (இ) | சொத்துக் கட்டுப்பாடு | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை |
| (ஈ) | ஒப்பந்த நிர்வாகம் | நிறைவேற்றப்படாத பணிகளுக்காக கொடுப்பனவு செய்தமை |
| (உ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| (ஊ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | முறையான வகையில் அகற்றப்படாமை |